सत्यमेव जयते

# இந்திய துணைத்தூதரகம்
# யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

## 2013 இல் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையில் 10,250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன

இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்போடும், கலந்தாய்வோடும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 43,000 வீடுகள் நிர்மாணிக்கும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டமான, 2013 ம் ஆண்டில் 10,000 புது வீடுகள் நிர்மாணித்தல் என்னும் இலக்கில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. **யாழ் மாவட்டத்தில் 1,832 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3,090, முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,540 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 1,074 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 648 வீடுகளுமாக வடமாகாணத்தில் 10,184 வீடுகள் 2013 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 66 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.** மேலதிகமாக, 100 வீடுகள் தலா இலங்கை ரூபா 250,000/= உதவியளித்து திருத்தியமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை பயனாளிகளுக்கு இலங்கை ரூபா 7.8 பில்லியன் (ஏறத்தாள இந்திய ரூபா 355 கோடி) நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக வெளிப்படைத் தன்மையை பிரபலிக்கக்கூடியதாக 2013 இல் முழுமையாக தமது வீட்டைப் பூர்த்தியாக்கிய 10,000 பயனாளிகளின் விபரங்கள் இந்தியத் தூதராலய இணையத்தளத்தில் (www.hcicolombo.org) வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் வட மாகாணத்தில் 2012 ஒக்ரோபர் மாதம் 2ம் திகதி மகாத்மா காந்தியின் பிறந்த நாளில் தொடக்கி வைக்கப்பட்டபோதிலும் 2012 ஒக்ரோபர்-டிசெம்பர் மாத காலப்பகுதியில் நிகழ்ந்த வட-கிழக்கு பருவபெயர்ச்சி காலநிலையால் ஏற்பட்ட தாமதத்தினால் 2013 ஜனவரியிலேயே கட்டிட வேலைகள் விரைவுபடுத்தப்பட்டன. 2014 இல் மேலும் 16,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மிகுதி 17,000 வீடுகளும் 2015 இல் பூர்த்தியாக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் வீடமைப்புத் திட்டம் உத்தியோகபூர்வமாக 2013 வைகாசி 22 இல் தான் ஆரம்பித்துவைக்கப்பட்டது. **இம் மாகாணத்தில் முதலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு 66 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் 400 வீடுகள்**

**முடிவடையும் தருவாயில் உள்ளது.** கிழக்கு மாகாணத்தில் மற்றைய மாவட்டங்களில் விரைவில் திட்டத்தை ஆரம்பிக்க முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்திய வீடமைப்புத்திட்டத்தின் 2ம் கட்டம், 4 தவணைகளில் வழங்கப்படும் இலங்கை ரூபா 550,000/- (ஏறத்தாள இந்திய ரூபா 255,000/-) மற்றும் தொழில்நுட்ப உதவியோடு பயனாளிகள் நேரடியாக கட்டுமானப்பணிகளில் பங்குபற்றும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாம் கட்டத்தில் வடமாகாணத்தில் 39,000 வீடுகளும், கிழக்கு மாகாணத்தில் 4,000 வீடுகளும் கட்டிமுடிக்கப்படும். இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு அளிப்பதற்காக கட்டிக்கொடுக்கப்படும் 43,000 வீடுகள் 2010 ஆண்டு ஆனி மாதம் அதிமேதகு மகிந்த ராஜபக்ச அவர்கள் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தபோது இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்களினால் 50,000 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியின் ஒரு பகுதியாகும். பல்வேறு அம்சங்கள் அடங்கிய திட்டத்தை அமுல்படுத்துமுகமாக 17 ஜனவரி 2012 இல் இரண்டு அரசாங்கங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

வீடமைப்புதிட்டத்தின் மூன்றாவது கட்டம், மத்திய, ஊவா மாகாணங்களில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கான முகவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தும் முறையில் 4,000 வீடுகள் கட்டும் பணி சம்பந்தப்பட்ட தோட்ட கம்பனிகளினால் காணிகள் விடுவிக்கப்பட்டு தேவையான காணி பண்படுத்தல் முடிவடைந்ததும் 2014 ஏப்பிரல் மாதமளவில் ஆரம்பிக்கப்படும். இந்திய அரசாங்கத்தால் மூன்றாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிபுணர் ஒருவர் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

நான்காவது கட்டம், முகவர்களினால் செயற்படுத்தும் முறை மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாங்களே வீடுகளை கட்ட முடியாத நிலையிலுள்ள உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான 4,000 வீடுகளை 2014 இல் நிர்மாணித்தலைக் கொண்டது.

முகவர்களினால் செயற்படுத்தும் முறை மூலம் வடமாகாணத்தில் 1000 வீடுகள் கட்டும் பரீட்சாத்தமான திட்டம் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளில் 2012 யூலையில் செய்து முடிக்கப்பட்டது.

இம் முழுத்திட்டமும் இந்திய அரசின் முழுமையான மானிய உதவித்திட்டத்தின் கீழ் இந்திய ரூபா 1372 கோடி (இலங்கை ரூபா 30 பில்லியன்), நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது இந்திய அரசாங்கத்தால் ஏனைய நாடுகளுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியுடன் ஒப்பிடும் போது மிகப்பெரிய திட்டமாகும்.

யாழ்ப்பாணம்

31 டிசம்பர் 2013